**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 61 /2020 வா.சா.2**

2026–ம் ஆண்டு ஜீலை திங்கள் 30–ம் நாள் வியாழக்கிழமை–ன் வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: சக்திவேல் தந்தை பெயர்: கருப்பையா

---

**<u>30.07.2026. பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் காரைக்குடியில் போஸ்ட்மாஸ்டராக 40 வருடமாக வேலை பார்த்தேன். காரைக்குடியில் எனக்கு வீடு உள்ளது. 1ம் வாதி எனக்கு சின்ன மாமனார் ஆவார். எனது மாமனார் சேது ராமன் ஆவார். எனது நிரூபணவாக்குமூலத்தில் வாதிகள், பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து பூர்வீக பாத்தியம் என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது.

2. தாவாச் சொத்து ராமசாமிக்கு பாத்தியப்பட்டு சேவூகனுக்கு கிடைத்தது என்பதற்கு ஆவணம் வாதிகள் தரப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சேவூகனின் வாரிசுகள் பழனியம்மாள், அழகம்மாள், சேதுராமன், லெட்சுமணன் என்றால் சரிதான். 01.01.1983ம் தேதி பாகப்பிரிவினை தஸ்தாவேஜ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது.

3. 01.01.1983ல் சேவூகனின் மூத்த மகள் பழனியம்மாள் உயிருடன் தான் இருந்தார். 01.01.1983ம் தேதியிட்ட ஆவணத்தில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. நான் வாதிதரப்பில் தாக்கல் செய்யதுள்ள உத்தேச வரைபடத்தை பார்க்கவில்லை. அழகு என்பவர் சேதுராமனின் மருமகன் ஆவார். அவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டதாக எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பழனியம்மாளின் மற்ற வாரிசுகளான சண்முகவேல், சேவூகபெருமாள் , பழனிச்சாமி ஆகியோர்களுக்கு பாகம் ஒதுக்கப்படாமல் அழகுக்கு மட்டும் பாகம் கொடுத்தார்கள்.

4. சேதுராமனின் மகளாகிய புனிதா எனது மனைவி ஆவார். சேதுராமனின் வாரிசுகளான தேவாயி, புனிதா, அனுசி ஆகியோர்களுக்குசொத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது சின்ன மாமனார் லெட்சுமணன் காளாப்பூர் தவிர பல

ஊர்களில் 40 வருடமாக போஸ்ட்மாஸ்டராக பணி புரிந்தார். நான் காளாப்பூருக்கு வந்த வருடம் 2011 ஆகும். வாதி, பிரதிவாதிகளுக்கிடையே பல வழக்குகள் நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் பல வழக்குகள், சில வழக்குகளுக்கு விவரம் தெரியும். வாதிதரப்பு பழனியம்மாள் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.